**யட்டவத்த பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 21 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 03 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து யட்டவத்த பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டில் காணி விற்பனையின் பேரில் அறவிடப்பட்ட ஒரு சதவீத வரிப் பெறுமதியான ரூபா 736,000 தொகையை வருமானத்திற்கு எடுக்காமல் வைப்புக்களில் நிறுத்தி வைக்கப்பட்ட காரணத்தினால் அவ்வரி வருமானம் சமமான பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபை கட்டிடத்தின் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்வதற்காக மாகாண எழுச்சி செயற்திட்டத்தின் கீழ் கிடைக்க வேண்டிய தொகை ரூபா 302,991 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டமையால் கடன்பட்டோர் மீதி கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டிற்குரிய வீட்டுக்கு வீடு, கிராமத்திற்கு கிராமம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 350,000 மற்றும் ரூபா 500,000 ஆன நிதிஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 02 செயற்திட்டங்களும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிறைவேற்றப்படாதிருக்கையில் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் எனக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் ரூபா 850,000 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) 2014 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் மூலம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 191,533 பெறுமதியான 173 கல்வனைஸ் குழாய்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) 03 கடன்கொடுத்தோர் மீதிகளின் பெறுமதி ரூபா 804,452 ஆல் நிதிக்கூற்றுக்களில் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கிடைக்க வேண்டிய கணக்குகள்

கிடைக்க வேண்டிய 04 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,231,286 ஆக இருந்ததுடன் அதில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை விஞ்சிய ரூபா 22,000 ஆன மீதிகள் உள்ளடக்கியிருந்தது.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

செலுத்த வேண்டிய 07 கடன்கொடுத்தோர் மீதிகளின் பெறுமதி ரூபா 13,993,623 ஆக இருந்ததுடன் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை விஞ்சிய ரூபா 203,977 ஆன மீதிகளும் அதில் உள்ளடங்கியுள்ளது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

05 கணக்கு விடயங்களுக்குரிய பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 351,752 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை திருப்திகரமானதாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் | |
| (i) 115 ஆம் விதி | திரவியங்கள் / பொருட்கள் களஞ்சியத்திற்கு கிடைத்ததாக உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், பொருட்கள் கிடைத்ததாக தொடராக பதிவு செய்யப்பட்டதன் பின்னர் கொடுப்பனவிற்காக ரூபா 209,660 பெறுமதியான 04 காசோலைகள் எழுதப்பட்டிருந்தன. |
| (ii) 218 ஆம் விதி | 1987 இன் பின்னர் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக குடியரசின் நிதிப்பிரமாணம் 571(2) | 02 வருடங்கள் முதல் 14 ஆண்டுகள் வரையான காலமாக இருந்து வரும் ரூபா 35,102 பெறுமதியான காலவதியான நிர்மாணத்தின் தடுத்து வைக்கப்பட்ட பணம் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | தொழிலாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யும் போது கல்வித் தகைமைகளாக 8 ஆண்டு சித்தியடைதல் தேவைப்பாடொன்றாக இருக்கையில் அதற்கு இணங்காத வகையில் 2 தொழிலாளர் பதவிகளுக்காக நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தன. துண்டு அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்காக சுற்றறிக்கை மூலம் இடமளிக்கப்படாதிருந்த போதிலும், அதற்கு இணங்காத வகையில் திறனற்ற / திறன் தகைமை இல்லாத ஒருவர் மின்சார தொழில்நுட்ப பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,279,479 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,111,150 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 831,671 வீழ்ச்சியைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வுகள்

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 02 ஆண்டுகளில் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் நிதிச் செயலாற்றல் தொடர்பான முக்கியமான சில தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) நிதி விளைவுகளின் மிகையை செயற்பாட்டு வருமானத்தின் சதவீதமாக எடுப்போமாயின் அந்த சதவீதத்தில் தொடர்ச்சியான வீழ்ச்சி ஒன்றைக் காண்பித்திருந்தது.

(ஆ) மொத்த செலவினத்தை மொத்த வருமானத்தின் சதவீதமாக எடுப்போமாயின் இந்த சதவீத்தில் தொடர்ச்சியான உயர்வைக் காட்டியதுடன் அது நிதிக் கட்டுப்பாடு தொடர்பில் திருப்திகரமான நிலைமையை அதன் மூலம் தென்படவில்லை.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 ஏக்கர் வரி

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 48,106 தொகையான நிலுவை ஏக்கர் வரி மீதியொன்று இருந்தது.

#### 2.3.2 நீர்க் கட்டணம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா நிலுவை நீர்க்கட்டண மீதி 85,680 ஆக இருந்தது.

## 2.3.3 கழிவுப் பொருள் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்களுக்காக கட்டணமொன்று அறவிடப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா நிலுவையாக இருந்த கழிவுப்பொருள் கட்டண மீதி ரூபா 15,350 ஆக இருந்தது.

## 2.3.4 ஏனைய வருமானம்

அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த 113 கட்டிட விண்ணப்பங்களுக்காக 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் இணக்கச் சான்றிதழ் விநியோகிக்கப்படாதிருந்ததால் சபைக்கு ரூபா 84,750 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

## 2.3.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 538,811 தொகையும், முத்திரைக் கட்டணமாக ரூபா 4,206,265 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தன.

## 2.4 மிகைக் கட்டணம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களுக்குரிய ரூபா 32,259 தொகை அறவிடவேண்டியிருந்தது.

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையால் நிர்வகிக்கப்படும் 15 சனசமூக மண்டபங்கள் அமைந்துள்ள காணி மற்றும் மயானங்கள் தொடர்பான உரித்து உறுதி மற்றும் நில அளவையாளர் திட்டங்கள் எதுவும் காணப்படவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டில் வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த 07 செயற்திட்டங்களுக்காக சபைக்கு ரூபா 1,060,151 ஆன முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன், குறித்த தொகை மீள்நிரப்பப்பட்டிருக்கவில்லை.

## 3.2 இனங்காணப்பட்ட நட்டம்

2002 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை அனுப்புவதில் தாமதம் காரணமாக ரூபா 5,807 ஆன மிகை கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### விளைவற்ற/ குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2008-2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,371,627 ஆன உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

## 3.4 ஒப்பந்த நிர்வாகம்

### (அ) டன்கன் தோட்ட முன்பள்ளி கட்டிடம் மற்றும் சிறுவர் பூங்கா அபிவிருத்தி செய்தல்

2013 மற்றும் 2014 இல் மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி முன்மொழிவின் கீழ் டன்கன் தோட்ட முன்பள்ளி கட்டிடம் மற்றும் சிறுவர் பூங்கா என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்குரிய நிர்மாணத்திற்காக ரூபா 710,497 செலவிடப்பட்டிருந்ததுடன் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்ட காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான, காணியை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) இடங்கம கிராமத்திற்கு நுழையும் வீதியை அபிவிருத்தி செய்தல்

2015 ஆம் ஆண்டின் மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி மானியங்களின் கீழ் ரூபா 1,000,000 ஆன நிதிஏற்பாட்டின் பேரில் இடங்கம கிராமத்திற்கு நுழையும் வீதியை அபிவிருத்தி செய்யும் நிர்மாணம் ரூபா 985,000 தொகைக்கு 2015 யூலை 27 ஆந் திகதி விவசாய அமைப்பிற்கும் மாகாண பொறியிலாளருக்கும் இடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டில் இரண்டு சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட ஹமர் பரிசோதனையின் போது நிர்மாணம் பலவீனமானதாக இருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது, 2015 செப்தம்பர் மாதத்தில் நிர்மாணத்தின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 2016 ஏப்ரல் 04 ஆந் திகதி வரையிலும் அந்நிர்மாணம் தொடர்பாக எவ்வித நடவடிக்கையொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (இ) அலுவலக கட்டிட நிர்மாணம்

புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 43,910,000 ஆன மதிப்பீட்டின் அடிப்படையில் அலுவலக கட்டிட நிர்மாணத்தை மேற்கொண்ட தனியார் ஒப்பந்தக்காரர் நிர்மாணத்திற்காக தேவையான நீரை பிரதேச சபை நீர் முறைமையிலிருந்து நேரடியாகப் பெற்றுக்கொண்டிருந்த போதிலும், பயன்படுத்தப்பட்ட நீரின் அளவினை இனங்கண்டு அறவீடொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

## 3.5 செயற்திட்ட தாமதம்

பிரதேச சபைகளை பலப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மஹவெல நீர் செயற்திட்டத்தை பராமரிக்கும் செயற்பாட்டிற்காக ரூபா 300,000 நிதிஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிர்மாணத்தின் வேலைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

கழிவுப்பொருள் முகாமைத்துவச் செயற்பாட்டிற்காக 2012 ஆம் ஆண்டு வரையில் மாகாண குறித்தொதுக்க மானியம் மற்றும் சபை நிதியம் என்பவற்றின் அடிப்படையில் ரூபா 659,062

செலவில் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அது கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாமல் அங்கு உடைந்த பொருட்கள் குவித்து வைக்கப்பட்டிருந்தன. சபையினால் அதிகாரப் பிரதேசத்தில் சிறிய பகுதியில் மாத்திரம் கழிவுகள் சேகரிக்கப்பட்டமையாலும், உக்காத பொருள் மேவுகையொன்று இன்றி எரிக்கும் முறைமையொன்று கடைப்பிடிக்கப்பட்டமையால், சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படுகின்ற நிலைமையொன்று எழுந்திருந்தது. பிரதேச சபை சரியான திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்பாடுகளைப் பின்பற்றியிருக்கவில்லை.

## 3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடமிருந்து முறையான நியமனக் கடிதமொன்று இல்லாமல் சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியொன்றுக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த ஓய்வுபெற்ற உத்தியோகத்தரொருவருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 186,000 தொகை படிகளாக சபை நிதியத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மக்கள் பிரதிநிதிகளின் பதவிக்காலம் 2015 மே 15 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும், மே மாதத்திற்குரிய உறுப்பினர் எரிபொருள் படிகள் முழுமையாக செலுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 7,500 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் வருமான மற்றும் செலவின விடயங்களுக்கிடையே நிதி ஏற்பாடு மாற்றப்பட்டதன் பின்னரும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கிடையே கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) 04 வருமான விடயங்களுக்காக ரூபா 10,510,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ் வருமானங்களை உழைப்பதற்கு தவறியிருந்ததுடன், 18 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கிடையே 34 சதவீதம் முதல் 95 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

(ஆ) 36 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 18,730,824 தொகையான மொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 29 செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 38 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் சிபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

------------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்